# பொதுக்காலம் 33-ம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-11-17

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் தானியேல் நூலிலிருந்து வாசகம்* 12: 1-3,

*திருப்பாடல்*16: 5,8. 9-10. 11,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்* 10: 11-14,18,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 13: 24-32)

*திருப்பலி முன்னுரை*

*தூய்மைக்குரியவர்களே, பொதுக்காலத்தின் முப்பத்துமூன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகைக்காக நம்மைத் தயார் செய்ய இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நம் ஆண்டவர் அரசருக்குரிய மாட்சியுடன் நமக்கு தீர்ப்பிட வரும் நாளில் நிகழப்போகின்றவை பற்றி சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் வருகைக்காக நாம் எப்பொழும் தயாராக இருக்க வேண்டுமென இன்றைய வாசகங்கள் எடுத்துரைக்கின்றன. கிறிஸ்து இயேசுவின் பலியால் தூயவர்களாக மாற்றப்பட்டிருக்கும் நாம், தொடர்ந்து அவருக்கு உகந்தவர்களாய் வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*காத்து பராமரிக்கும் அன்பு இறைவா!*

*எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமக்குரிய சான்று வாழ்வு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*இறைநம்பிக்கை கொண்டவர்களாய் வாழ்ந்து, எதிர்நோக்கா பொழுதுகளில் இறப்பினைச் சந்திக்க நேர்ந்திருக்கும் எண்ணற்ற விசுவாசிகளுக்காக மன்றாடுவோம்.*

*கருணைத் திருவுருவே - காத்து நிற்கும் பேரருளே - எம் இறைவா! நரை திரை பருவங்களில் நலிவுற்று மரித்தவர்கள் - பிணிகளின் தாக்கத்தால் நம்மைப் பிரிந்து சென்றிருப்பவர்கள் எதிர்பாரா விபத்திற்கு இலக்காகி இறந்தவர்கள் - இத்தகு விசுவாசிகள் இறை இரக்கத்திற்கு உள்ளாகவும், இவர்களை வான்வீடு வரவேற்றுக் கொள்ளவும் வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.*

*மெய்யங்கடவுளை அறியாது வையகத்தில் வாழ்ந்து மறைத்திருக்கும் ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.*

*எல்லை காணா பேரன்பே - இரக்கத்தின் ஊற்றே - எம் இறைவா! மண்ணக மகவாக பிறப்பெடுத்து, பாவம் போக்கும் பலியாக இன்னுயிரை ஈந்து, மனுக்குலத்திற்கு மீட்பு எனும் பெருங்கொடையை வழங்கியிருக்கும் திருச்சுதன் இயேசுவை, உலகம் முழுமையாக அறிந்து போற்றவும், புகழ்ந்து ஏற்றவும் வேண்டுகிறோம். கிறிஸ்து இயேசுவை அறியாது வாழ்ந்து மரித்திருக்கும் ஆன்மாக்கள் மீது வானகக் கொடையாம் மீட்பு வழங்கப்படும் வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.*

*காத்து பராமரிக்கும் அன்பு இறைவா!*

*எங்கள் கடின உழைப்பின் மூலம் குடும்பங்களின் வாழ்வு மலரவும், குடும்பங்களிலுள்ள அனைவரையும் மதித்து, நல்வாழ்வு வாழவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*காத்து பராமரிக்கும் அன்பு இறைவா!*

*இன்றைய உலகில் அன்பு உண்மை, சமத்துவம். சகோதரத்துவம், நீதி, நேர்மை போன்ற மனிதநேயப் பண்புகள் மக்களிடையே பெருக வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*காத்து பராமரிக்கும் அன்பு இறைவா!*

*கொடிய நோய்கள், வறுமை போன்ற பெருந்துன்பங்களால் அவதிப்படுகின்ற அனைவரையும் நீர் பாதுகாத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*காத்து பராமரிக்கும் அன்பு இறைவா!*

*இளையோரின் நல்வாழ்விற்காகவும், அவர்கள் இளமையில் ஆன்மீகத்திலும், சமூகத்திலும் நல்மனப்பாங்குடன் ஈடுபட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*